செ.வெ.எண்:99 நாள்:19.02.2018

**புதிய கண்டுபிப்பாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்த திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் "தேசிய புத்தாக்கத் திருவிழா"**

*****************

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் அறிவியல்-தொழில் நுட்ப விழிப்புணர்வை மேம்படுத்த மத்திய அரசின் பண்பாட்டு துறை அமைச்சகத்தின் கீழ் திருநெல்வேலியில், மாவட்ட அறிவியல் மையம் 1987 ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள ஒரே மாவட்ட அறிவியல் மையம் இதுவாகும். இங்கு, கோளரங்கம், 3டி தியேட்டர், எலெக்ட்ரனிக்ஸ் கேலரி, அறிவியல் பூங்கா போன்ற நவீன வசதிகள் உள்ளன. இங்கு உள்ள அறிவியல் தொழில் நுட்ப வசதிகளைக் காண மாநிலம் முழுதும் இருந்து ஆண்டுக்கு 3.7 லட்சம் மாணவர்களும், பொதுமக்களும் வருகை புரிகின்றனர்.

திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையம் தேசிய அளவிலான "புத்தாக்கத் திருவிழா" வை (Innovation Conference) வருகின்ற மார்ச் **6**ஆம் தேதி முதல் **8**ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இல்லத்தரசிகள், மூத்த குடிமக்கள், விவசாயிகள், சுயதொழிலாளர்கள், உணவு, நகை, கலை மற்றும் பாரம்பரிய அறிவு போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கலாம். இத்திருவிழாவில் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு தங்களது கண்டுபிடிப்புகளை காட்சிபடுத்தவும் பொதுமக்களுக்கு விளக்கவும் வசதி செய்து கொடுக்கப்படும். இதில் வயது, பாலினம் மற்றும் கல்வித் தகுதி போன்ற எந்த வரம்புமின்றி அனைவரும் தங்களுடைய படைப்புகளை காட்சிப்படுத்தலாம். பங்கேற்கும் கண்டுபிடிப்பாளர்களுக்கு பயணப்படி, தங்கும் வசதி ஏற்படுத்தித்தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்திலோ அல்லது http://www.dsctirunelveli.org.in என்ற இணையதளத்திலிருந்தோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை

xploreinnovatorsdsct@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ, அல்லது அஞ்சல் வழியிலோ சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க கடைசி நாள் **27-02-2018.** மாவட்ட அறிவியல் அலுவலர், மாவட்ட அறிவியல் மையம், கொக்கிரக்குளம் திருநெல்வேலி- 627009 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் வழியிலோ சமர்ப்பிக்கலாம். புத்தாக்கத் திருவிழாவில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு: 0462-2500327/2500256/98400998686/9442994797/9788078048/9944568199 என்ற எண்களை தொடர்புகொள்ளவும். இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி புதிய கண்டுபிப்பாளர்கள் தங்களது திறமைகளை உலகறியச் செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப்நந்தூரி இ.ஆ.ப அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**